மாலைதமிழகம் - (19.3.2016)

MALAI TAMIZHAGAM

# சாய்ராம் மேலாண்மை கல்லூரியில் மத்திய பட்ஜெட் பற்றி கலந்துரையாடல்

**சென்னை, மார்ச் 19-**

சென்னை மேற்கு தாம்பரத்தில் உள்ள சாய்ராம் மேலாண்மை கல்லூரி சார்பில் மத்திய பட்ஜெட்-2016 குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் டி.கே.ரங்கராஜன் எம்.பி., காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் அமெரிக்கா நாராயணன், தமிழக பா.ஜ. செய்தி தொடர்பாளர் இராம.சுப்பிரமணியன், மனித வள மேம்பாட்டு ஆலோசகர் சோம.வள்ளியப்பன் ஆகியோர் கலந்து கொண்டு பட்ஜெட் குறித்த கருத்துகளை எடுத்துரைத்தனர்.

இதில் மாறன் வரவேற்புரையாற்றினார். கல்லூரி



முதல்வர் சி.வி.ஜெயக்குமார் அறிமுக உரையாற்றினார்.

நிகழ்ச்சியில் டி.கே.ரங்கராஜன் பேசுகையில், நாட்டு மக்களுக்கு நல்ல குடிநீர், கல்வி, சுகாதாரம், தொழில் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

அமெரிக்க நாராயணன் பேசும்போது, பெரிய அளவிலான முதலீடுகள் விவசாயத்துக்கு ஒதுக்கப்பட்டதாக தெரிவித்தார்.

சோம.வள்ளியப்பன் பேசும்போது, நாட்டு குடிமக்களுக்கான உரிமை மற்றும் கணினிமயமாக்கப்பட்ட பத்திரப்பதிவு, நெடுஞ்சாலை துறைக்கு பெரிய அளவில் நிதி ஒதுக்கப்பட்டது வரவேற்கத்தக்கது என கூறினார்.

இராம.சுப்பிரமணியன் பேசுகையில், இந்த பட்ஜெட் முழுவதும் விவசாயம், ஊரக வளர்ச்சி, வறுமை ஒழிப்பு மற்றும் உயர்கல்வியை மேம்படுத்துவதாக அமைந்துள்ளது என்றார்.

மாறன் பேசுகையில், விவசாய உற்பத்தி மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தை வெளிநாட்டு ஏற்றுமதியை பலப்படுத்த உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்றார்.

MALAI TAMIZHAGAM